மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

அ.வ.எண்.97/2019

பிவாசா 1

தேதி :- 17.12.2021

பெயர் :- சண்முகவேல்

1873ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10வது பிரிவின் படி 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் தேதி 16 ஆம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கண் பார்வை நன்றாக தெரியுமா என்றால் குறைவாக தான் தெரியும். கண் பார்வை கொரோனாவுக்கு பின தான் குறைவாக தெரியும். நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பாரா 3ல் புல எண்.816/3 பிளாட் எண் 24 என்ற இடம் சங்கான் என்ற சங்கரன் 9.9.1987 இலவச பட்டா நிபந்தனை படி ஒரு ஆண்டுக்குள் கட்டிடம் கட்டாததால் காலாவதி ஆகிவிட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதனால் சங்கான் என்ற சங்கரன் என்பவருக்கு பட்டா கொடுக்கப்பட்டதை ஒத்து கொள்கிறேன் என்றால் சரிதான். ஆனால் காலாவதி ஆகிவிட்டதால் பட்டா செல்லாது. பட்டா எவ்வாறு காலாவதி ஆகிவிடும் என்பது எனக்கு தெரியும். பட்டாவில் விவரம் குறிப்பிடப்பட்டிருக்கும். நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் பாரா 4ல் சொல்லப்பட்ட விவரம் உண்மை தானா என்றால் சரிதான். இந்த கிரையம் பதிவு செய்யப்படவில்லை அதனால் செல்லாது என்கிறேன் என்றால் சரிதான். உண்ணாமலை, கண்ணுதேவர்,இசக்கிதேவர் ஆகியோர் உயிருடன் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் ஆனால் இறந்துவிட்டார்கள். அவர்கள் உயிருடன் இருந்த போது வேலி அமைத்து இருந்தார்கள் வேலியை அப்படியே விட்டுவிட்டு இறந்துவிட்டார்கள். நிரூபண வாக்குமூலத்தில் பாரா 5ல் சொல்லப்பட்ட விவரம் உண்மை தானா என்றால் உண்மை தான். பட்டாவில் ஒரு வருடத்தில் வீடு கட்டாததால் பட்டா உரிமை அற்றுபோய்விட்டது எனக்கு எப்போது தெரியும் என்றால் பட்டாவை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். வழக்கு ஆவணங்கள்

எனக்கு கிடைக்க பெற்றது. வழக்கு ஆவணங்களை பார்த்து தான் பட்டா அற்று போன விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தெரிந்து கொண்டேன். சர்வேயர் அளக்கும் போது தெரிந்து கொண்டேன். சர்வேயர் எப்போது அளந்தார் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2018ல் அளந்தார். 2018ல் சர்வேயர் அளப்பதற்கு யார் படி கட்டினார் என்றால் நான் தான் கட்டினேன். சர்வேயர் இடத்தை அளக்கும் போது விஏஓ மற்றும் தலையாரி வந்தார்களா என்றால் வந்தார்கள். சர்வேயர் இடத்தை அளப்பதற்கு முன்பு வீட்டை சுற்றியுள்ளவர்களுக்கு அறிவிப்பு கொடுத்தாரா என்றால் தெரியாது, பட்டா வழங்கவேண்டி மனு கொடுத்திருந்தேன் அப்போது அளந்தார்கள். பட்டா வேண்டி மனு கொடுக்கும் போது நில உரிமை ஆவணம் எந்த ஆவணம் மனுவுடன் சேர்த்து கொடுத்தேன் என்றால் 5 ஆண்டுகள் தொடர்ச்சியாக செலுத்திய தீர்வை ரசீது கொடுத்தேன் மற்றும் உரிமை இருப்பதாக தெரிவித்தேன். பட்டா கொடுக்கும் போது எனக்கு எவ்வளவு விஸ்தீரணம் பூமியில் இருப்பதற்கு என்ன ஆவணம் கொடுத்தேன் என்றால் பழைய பட்டா நகல் கொடுத்தேன். பழைய பட்டா நகல் யார் பெயரில் உள்ளது என்றால் ரஷிதா பெயரில் உள்ளது. ரஷிதா தான் என் முன் பாக்கியஸ்தர் என்றால் சரிதான். ரஷிதாவுக்கு 3 செண்ட் விஸ்தீரணம் உள்ள பூமிக்கு பட்டா கொடுத்திருந்தாகள். ரஷுதா அந்த இடத்தில் வீடு கட்டியிருந்தாரா என்றால் வீடு கட்டுவதற்கு பவுண்டேசன் போட்டு இருந்தார். வருடம் நினைவில் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் முகவரியில் சொன்ன விவரம் சரிதான். கதவு எண்.5/223 எப்போது கொடுத்தார்கள் என்றால் வீட்டுவரி ரசீது போடும் போது 28 வருடத்திற்கு முன்பு கொடுத்தார்கள். 28 வருடமாக கதவு எண்.5/223 வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால்சரிதான். நான் குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கு பக்கம் யார் உள்ளார் என்றால் மலைஅழகு என்பவர் குடியிருக்கிறார். மலைஅழகு காந்தி ஆசாரி என்பவரிடமிருந்து வீட்டை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல, வேறு நபரிடமிருந்து வாங்கியுள்ளார். என் வீட்டிற்கு பின் பக்கம் வடக்கில் 10 வருடமாக குடியிருக்கிறார். நீதிமன்றத்தில் லதா, வள்ளிநாயகத்திற்கு எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் வாசாஆ1 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் பத்திரத்தில் கல்யாணி அம்மாள் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வாசாஆ1ல் கண்டுள்ள சொத்து இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால்

சரிதான். கல்யாணிஅம்மாள் என்பவர் என் மனைவி லதாவின் அக்கா என்றால் சரிதான். வாசாஆ1ல் மலையழகு வீட்டிற்கு தெற்கு வாசாஆ1 சொத்து இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ1ல் நான் முதல் சாட்சி என்றால் சரிதான். பிவாசாஆ1ஐ முறப்பநாட்டில் உள்ள டி.சங்கர் என்ற வழக்கறிஞர் தான் தயார் செய்தார் என்றால் திருப்பதி என்பவர் தான் தயார் செய்தார். திருப்பதி என்பவர் பத்திர எழுத்தர் ஆவார். வாசாஆ1ல் சொத்தின் மதிப்பு 4 லட்சம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பத்திர எழுத்தர் திருப்பதியிடம் வாசாஆ1 பத்திரத்தை பதிவு செய்ய பட்டா கொடுத்தேன். பட்டாவை தவிர வேறு என்ன ஆவணம்கொடுத்தேன் என்றால் கொடுக்கவில்லை. பிவாசாஆ1 பத்திரம் எழுதப்பட்ட காலம் முதல் நானும் என் குடும்பத்தாரும் கதவு எண்.5/223 வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால் நானும் என் மனைவியும் தான் உள்ளோம். பிவாசாஆ1 எழுதி கொடுத்த பிறகு தான் எதிர்வழக்குரை தயார் செய்து போட்டோம் என்றால் ரேஷன் கார்டு வாங்க வேண்டி பத்திரம் போட்டேன் பிறகு நீதிமன்றத்தில் கொடுத்தேன். எதிர்வழக்குரையில் பிவாசாஆ1 பற்றிய விவரமும் இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வரம்பு இல்லை என்று தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை, விவரம ்தான் தெரிவித்தேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் போது பிவாசாஆ1 நகல் கொடுத்தேனா என்றால் இல்லை, தற்போது தான் கொடுத்தேன். ரேஷன் கார்டு வட்டாட்சியரிடம் கேட்டேன். வட்டாட்சியர் என்னிடம் பதிவு அலுவலகத்தில் பத்திரம் போட்டு வர சொன்னார் என்றால் ரேஷன் கடைமற்றும் விஏஓ அலுவலகத்தில் சொன்னார்கள். விஏஓவும் பத்திரம் போட சொன்னார் என்றால் சரிதான். பிவாசாஆ1 பதிவு செய்ய நான் சாட்சியாக உள்ளேன் அதற்கு எந்த பத்திர அலுவலகம் சென்றேன் என்றால் முறப்பநாடு. என் மனைவி என் மகன்களுக்கு எழுதி கொத்த பிவாசாஆ1 பத்திரத்தில் தபசில் சொத்து என் மனைவிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மனைவிக்கு இந்த சொத்து எவ்வாறு பாத்தியம் என்று பிவாசாஆ1ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 20 ஆண்டு காலம் ரசீது கொடுத்துள்ளேன். நான் குடியிருக்கும் வீடு, வாதி வீடு மேற்கிலிருந்து கிழக்காக உள்ள தென்னஞ்சோலை தெருவில் வடக்காக உள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் உள்ள எல்லா வீடுகளுக்கும் வாசல் தெற்கு நோக்கி உள்ளது என்றால் சரிதான். நான் 5/223 வீட்டில் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கு பக்கம் காம்பவுண்ட்

சுவர் உள்ளது என்றால் சின்னதாக உள்ளது பாம்பு வருவதை தடுப்பதற்காக கட்டியுள்ளது. கிழக்கில் உள்ள சுவர் தெற்கிலிருந்து வடக்காக உள்ளது என்றால் சுவர் பாதி தான் கட்டியுள்ளேன் பாதி இடம் கம்பி வேலி தான் உள்ளது. தெற்கிலிருந்து வடக்கு வரை உள்ள கிழக்கு பக்க காம்பவுண்ட் சுவர் பூமியிலிருந்து எவ்வளவு உயரம் உள்ளது என்றால் 4 அடி உயரம் உள்ளது. கிழக்கு பக்க காம்பவுண்ட் சுவருக்கு கிழக்கில் தான் வாதியும் அவர் குடும்பமும் குடியுள்ள வீடு காலியிடம் உள்ளது என்றால் இலவச வீடு கட்டியுள்ளார்கள். நான் 28 வருடமாக அந்த இடத்தில் வாழ்ந்து வருகிறேன். இலவச வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் 3 ஆண்டுகளுக்கு முன்பு. வாதி இலவச வீடு கட்டும் போது இது என் இடத்தில் வருகிறது என்று நான் ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை, அவர்கள் புறம்போக்கில் கட்டுவதாக சொன்னதால் நான் ஆட்சேபனை செய்யவில்லை. பிரமாண வாக்குமூலம் பத்தி 12ல் சொன்ன விவரம் குறித்து கேட்ட போது சரிதான். வாதிக்கு அரசு பட்டா வழங்கவில்லை. பட்டா இல்லாமல் தான் கட்டினார். பட்டா இல்லாமல் வீடு கட்டியதால் அந்த வீடு வாதிக்கு சொந்தமில்லை என கட்சி செய்கிறேன் என்றால் அவர்கள் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். நிரூபண வாக்குமூலத்தில் 15வது பத்தியில் சொல்லியுள்ள விவரம் சரிதான். வாதிக்கு பட்டா வழங்கினார்கள். நான் தமிழக அரசை ஏமாற்றி இலவச தொகுப்பு வீடு வாதிகள் கட்டியது சரியானது அல்ல என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரஷிதாவிடமிருந்து நான் சொத்தை எவ்வாறு வாங்கினேன் என்றால் வெளியே வைத்து கையொப்பம் செய்து வாங்கினேன். இந்த சொத்திற்கு பத்திரம் போட முடியாது என்பதால் வெளியே வைத்து கையொப்பம் செய்துள்ளோம். அன்னாநகர் முழுவதும் இவ்வாறு தான் செய்கிறோம். வாதி வீடு என் வீடு மற்றும் அனைத்தையும் குறிப்பிட்டு தான் அண்ணாநகர் என்று சொல்கிறேன் என்றால் சரிதான். அண்ணாநகரில் நான் வீடு கட்டும் போது 200 வீடுகள் இருந்தது. அண்ணாநகருக்கு தற்போது தென்னஞ்சோலை தெரு என்று மாறியுள்ளது என்றால் சரிதான். அண்ணாநகரில் வீடு கட்டி குடியிருக்க முடியாதவற்கு தான் தமிழக அரசு பட்டா வழங்கியது என்றால் சரிதான். அதே போல் பட்டா வழங்கப்பட்ட ஒரு நபர் தான் என் முன் பாக்கியஸ்தர் ரஷிதா என்றால் சரிதான். ரஷிதாவுக்கு வழங்கப்பட்ட பட்டாவின் அடிப்படையில் நான் வாங்கிய பத்திரம் பதிவு செய்யாமல் ஏற்படுத்தப்பட்டது

என்றால் சரிதான். வாதி எழுதி வாங்கியதாக சொல்லும் சங்கான் என்ற சங்கரனுக்கும் அரசாங்கம் பட்டா கொடுத்திருந்தது என்றால் சரிதான். பிறகு அளவு செய்யும் போது கட்டிடம் இல்லை என்று பட்டாவை ரத்து செய்தார்கள். முதலில் பட்டா கொடுத்திருந்தார்கள் பிறகு கட்டிடம் இல்லை என்று சொல்லியுள்ளேன் அந்த அளவை எப்போது நடந்தது என்றால் 1992ம் ஆண்டு அளந்தார்கள். அப்போது பட்டா ரத்தானதாக சொன்னார்கள். 1992ல் அளக்கும் போது நான் குடியிருக்கும் வீட்டிற்கு கதவு எண் என்ன இருந்தது என்றால் 5/222 என்று நினைக்கிறேன் பழைய கதவு எண் என்பதால் எனக்கு நினைவில் இல்லை. தென்னஞ்சோலை தெரு என்ற பெயர் மாற்றும் போது அண்ணாநகர் என்பதிலிருந்து மாறும் போது கதவு எண் மாற்றினார்கள் என்றால் தென்னஞ்சோலை தெரு மற்றும் அண்ணாநகர் என்பது ஒன்று தான். அண்ணாநகரிலிருந்து தென்னஞ்சோலை தெருவாக மாறும் போது கதவு எண் மாறியது என்றால் சரிதான். அண்ணாநகர் என்பது தென்னஞ்சோலை தெரு என்று எப்போது மாறியது என்றால் அவ்வாறு இல்லை ஒரே பெயர் தான் மாறி மாறி சொல்வார்கள். இரண்டும் வேறு அல்ல. ரஷிதாவிடமிருந்து நான் வெளியில் பத்திரம் போடும் போது சர்வே எண் 816/3 ஆகும். தற்போதும் சர்வே எண்.816/3 என்று தான் உள்ளது. பிவாசாஆ1ல் சர்வே எண் என்ன சொன்னேன் என்றால் 816/3 என்று தான்சொல்லியுள்ளேன். பிவாசாஆ1 போட்ட பிறகு அதை வாங்கியிருக்கும் என் மகன்கள் பெயரில் தீர்வை ரசீது மாறியதா என்றால் 6 மாதத்திற்கு முன்பு மாறிவிட்டது. வழக்கு நிலுவையில் உள்ள போது மாறியது என்றால் எனது மகன்கள் மாற்றினார்கள். பிவாசாஆ1ல் காம்பவுண்ட் சுவர் உள்ள விவரம் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பிறகு பத்திரம் வெளியீடும் போது தள ஆய்வு செய்யும் போது பதிவு அலுவலகத்தில் சுவருக்கான மதிப்பீடு செய்து ரசீது வழங்கினார்கள் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். தொகை எவ்வளவு என்றால் 1000 ரூபாயக்கு மேல் இருக்கும். காம்பவுண்ட் சுவர் மற்றும் அதன் கீழ் பகுதி சொல்லவில்லை என்பதால் 1000 ரூபாய் வசூல் செய்தார்கள். பிவாசாஆ1 பத்திரம் எத்தனை செண்ட்டுக்கு போட்டேன் என்றால் 3செண்ட்டுக்கு போட்டேன். பிவாசாஆ1ல் சொல்லப்பட்ட 3 செண்ட் நிலம் தள ஆய்வில் வராததால் தான் ரூ.1000 என்னிடம் வசூலித்தார்கள் என்றால் சரியல்ல, காம்பவுண்ட் சுவர் காட்டவில்லை என்பதால் தான் போட்டார்கள். அண்ணாநகராக இருக்கும்

போது அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் 2 1/2 செண்ட் பூமி ஒதுக்கி பிளாட் போட்டார்கள் என்றால் எனக்கு 3 செண்ட் கொடுத்தார்கள். அரசாங்கத்தில் ஒவ்வொருவருக்கும் 3 செண்ட் மற்றும் 2 1/2 செண்ட் அளவு கொண்ட பூமி கொடுத்தார்கள்ா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எனக்கு 3 செண்ட் கொடுத்தார்கள். எனக்கு 3 செண்ட் பட்டா கொடுத்த தாசில்தார் யார் என்றால் பெயர் தெரியாது. குருவட்ட அலுவலர் அய்யனார் என்பவர் அந்த வட்டாட்சியர் அலுவலகத்தில ்வேலை செய்கிறார் அவர் எங்கள் ஊரில் குடியிருக்கிறார் என்றால் செய்துங்கநல்லூரில் குடியுள்ளார் அவருக்கு சொந்த ஊர் மணக்காடு ஆகும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு குருவட்ட அலுவலர் மற்றும் தாசில்தார் கையூட்டு பெற்று எனக்கு அதிகமாக இடம் வழங்கியதாக மனு அனுப்பினார் என்றால் அந்த சமயத்தில் குருவட்ட அலுவலர் அய்யனார் அந்த வட்டாட்சியர் அலுவலகத்தில் வேலை பார்க்கவில்லை. எந்த வருடம் எந்த மாதத்தில் குருவட்ட அலுவலர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. பிவாசாஆ2 நான் தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியும். பிவாசாஆ2 பட்டா மாறுதல் உத்திரவில் என் மகன்கள் பெயரை சேர்ப்பதற்கு யார் மனு கொடுத்தார்கள் என்றால எனது மகன்கள் தான் கொடுத்தார்கள். எந்த தாவா சொத்து தொடர்பாக வழக்கு நிலுவையில் இருக்கிறதோ அந்த தாவா சொத்து சம்மந்தமாக பிவாசாஆ2 ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ2ல் கிராம நிர்வாக அலுவலர் செய்துங்கநல்லூர் அறிக்கை செய்யப்பட்டதாக சொல்லப்பட்டது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் எந்த தேதியில் எங்களை விசாரித்து ஆவணங்கை பெற்றார் என்றால் என் மகன்களிடம் தான் விசாரித்தார். பிவாசாஆ2 பட்டா மாறுதல் பிவாசாஆ1 அடிப்படையில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ3 செய்துங்கநல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட தகவல் என்றால் சரிதான். வட்டார வளர்ச்சியரிடமிருந்து ஆவணம் பெற யார் சொன்னார்கள் என்றால் எனது சுய முயற்சியில் வாங்கினேன். பிவாசாஆ4 வழக்கு நிலுவையில் இருக்கும் போது வழக்கு சொத்து சம்மந்தமான ஆவணங்கள் பெற்றோம் என்றால் அதற்கு முன்பே 2019ல் என் மனைவி பெயருக்கு பட்டா, என் மகன்கள் பெயரில் பட்டா வாங்கினேன். பிவாசாஆ4 மூலமாக சில ஆவணங்களை பெற்றோமா என்றால் பட்டா மட்டுமே பெற்றோம். தாவா சொத்து தொடர்பான ஆவணங்கள் பிவாசாஆ4

மூலம் நான் வாங்கவில்லை என்றால் பட்டா மட்டுமே வாங்கினேன். வாதியின் முன் பாக்கியஸ்தர்கள் பெயரில் உள்ள பட்டாவை நான் வாங்கினேனா என்றால் முன் பாக்கியஸ்தர்கள் பெயரில் எவ்வாறு ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்று கேட்டேன். பிவாசாஆ5 எதற்காக போட்டேன் என்றால் அனுபவத்தை காட்ட போட்டுள்ளேன். பிவாசாஆ5 ஆவணத்தில் என் வீடடின் கதவு எண் என்ன போட்டுள்ளது என்றால் நான் அதை பரிசீலிக்கவில்லை. பிவாசாஆ5 2005 - 2009 ஆண்டு சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். அதற்கு முன்பாக குடும்ப அட்டை என்ன ஆகிவிட்டது என்றால் முத்தாளங்குறிச்சி கிராமம் பொந்தங்குளி ஊரில் உள்ள கூட்டு ரேஷன் கார்டில் பெயர் இருந்தது. பிறகு பிரித்து வந்தேன். செய்துங்கநல்லூரிலிருந்து பொந்தங்குளி கிராமம் 5 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. பிவாசாஆ5 ரேஷன் கார்டு வழங்கும் போது அரசாங்கம் எனது வயது 45 என்று குறிபிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். பிவாசாஆ5 காலத்தில் 2வது மகன் அழகுநயினாருக்கு வயது 12 என கண்டுள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ5 ஆவணத்தில் என் வீட்டின் பழைய எண்.5/182என்றும் புதிய எண் 5/223 என கண்டுள்ளது என்றால ் சரிதான். மின் கட்டண ரசீதில் பிவாசாஆ1 எழுதி கொடுத்த பிறகும் என் மனைவி பெயரில் தான் பிவாசாஆ6 உள்ளது என்றால் சரிதான். பிவாசாஆ1 ஏற்படுத்தப்பட்ட பிறகும் பிவாசாஆ7 தண்ணீர் வரி ரசீதுகள் நடப்பு வரை என் மனைவி பெயரில் உள்ளது என்றால் சரிதான், பட்டா மட்டுமே மாற்றினேன் கொரோனா காலம் என்பதால் மாற்ற இயலவில்லை. பிவாசாஆ1 தாவா சம்மந்தப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டி பதியப்பட்டது என்றால் சரியல்ல. பிவாசாஆ1 தாவா சொத்தை வாதி சொத்தை அபகரிக்க பெயரளவில் பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நானும் 2வது பிரதிவாதியும் சேர்ந்து ஒரே பதிலை (Colluded) ஆகி நீதிமன்றத்தில் பதிந்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் பத்தி 17ல் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரை சேர்க்காததால் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று வழக்கடியுள்ளேன் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியரை ஏன் சேர்க்கவில்லை என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. வாசாஆ13ல் உள்ள புகைபடத்தை பார்த்து என்னால் விவரம் கூற முடியுமா என்றால் சரியாக தெரியவில்லை. வாசாஆ13 தாவா சொத்தும் மற்றும் அருகில் உள்ள படங்கள் குறித்த ஆவணம் கிடைக்க பெற்றதா என்றால் கிடைக்க பெறவில்லை. நான் குடியிருக்கும் வீட்டுக்கு கிழக்கு பக்கம் பிளாட் எண்.24

உள்ளது என்றால் சரியல்ல. என் வீடு தான் பிளாட் எண்.24 ஆகும். என் வீடு பிளாட் எண்.24 என்றால் என் வீட்டிற்கு கிழக்கில் உள்ள வீடு பிளாட் எண்25 என்றால் பிளாட் குறித்த விவரம் எனக்கு தெரியாது. பிவாசாஆ1ல் என் இடம் பிளாட் எண் 24ல் உள்ளதாக தான தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீட்டின் தெற்கு பக்கம் கிழமேல் அடி 10 மீட்டர் ஆகும். வடக்கு பக்கம் கிழமேல் அடி 10 மீட்டர் தான். மேற்கு பக்கம் தென்வடல் நீளம் சரியாக தெரியவில்லை. கிழக்கு பக்கம் தென்வடல் நீளம் 10 மீட்டர் என்று சொன்னார்கள். நான் 28 வருடமாக அளக்கவில்லை என்றால் நான் ஏன் அளந்து பார்க்கவேண்டும். பிவாசாஆ1 போடுவதற்கு முன்பு அளந்து பார்த்து அளவு சொன்னேன் என்றால சரிதான். அளந்து பார்த்து பிவாசாஆ1ல் போட்டுள்ள அளவு சரியாக உள்ளதா என்று பார்ப்பதற்கு பதிவு துறையில் வந்தார்களா என்றால் வழக்கம்போல் வந்தார். நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கு பக்கம் வாதி வீடு உள்ளதா என்றால் எனது வீட்டிற்கு காலிமனைக்கு தள்ளி வாதி வீடு உள்ளது. வாதி வீட்டிலிருந்து எவ்வளவு தூரம் தள்ளி மருதூர் மேலகால்வாய்கால் உள்ளது என்றால் 25 மீட்டர் தள்ளி உள்ளது. வாதி வீட்டுக்கு அடுத்து கிழக்கு மருதூர் மேலகால்வாய்கால் பகுதிக்கும் இடையில் 25 மீட்டர் காலியிடம் தான் உள்ளது என்றால் சரிதான். வாதி குடியிருக்கும் இடமும் மருதூர்மேலகால்வாய்கால் முடியும் பகுதி தான் தென்னஞ்சோலை தெரு முடியும் பகுதி என்றால் சரிதான். என் வீடடிற்கு நேர் வீட்டிற்கு கிழக்கு பக்கம் காந்திஆசாரி வீடு உள்ளது. தற்போது அந்த வீட்டில் யார் குடியுள்ளார்கள் என்றால் வேறு நபர்கள் வாங்கி காம்பவுண்ட் போட்டுவிட்டார்கள். காந்திஆசாரி வீட்டிற்கு தெற்கு வாதி குடியிருக்கும் வீட்டிற்கு வடக்கு பக்கம் காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவர் வடக்கு பக்கம் மேற்கிலிருந்து கிழக்கே எந்த அளவில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்துகாரரிடம் தான் கேட்க வேண்டும். எவ்வளவு தூரத்தில் முடியும் என்பது எனக்கு தெரியாது. வாதி வீட்டிற்கு கிழக்கு பக்கம் 25 மீட்டர் காலியிடம் மனைக்கு நீண்டு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியாக சாட்சியம்
என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு சாட்சிக்கு
வாசித்து காண்பித்து அவரால் சரி என

ஒப்புக்கொண்டு கையொப்பம் இடப்பட்டது.

மாவட்ட உரிமையியில் நீதிமன்றம்.

Sd/- Thiru. D.Myil Swamy B.Com., B.L.,
District Munsif,
Srivaikundam